தாகச் சொல்லியிருக்கிறார்கள் பொதுமக்களிடமிருந்தும் வசூல் செய்யப்படும். மதிப்பிற்குரிய பொள்ளாச்சி மகாலிங்கம் அவர்கள் கூட இதற்காக 1 லட்சம் ரூபாய் தருவதாக வாக்களித்துள்ளார்கள் இந்தத் திருப்பணி வேலே 5 ஆண்டுகள் முதல் 7 ஆண்டுகளுக்கு நடைபெறும் என்று கருதி கோயில் நிதியிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் 5 லட்சம் கொடுக்கலாம் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அரசாங்கத்தால் கொடுக்கப்பட மாட்டாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

THIRU K. S. KOTHANDARAMIAH : May I know from the Hon. Minister for Religious Endowments whether this Government has prepared a list of temples which are in a deteriorating condition and which require repairs? If so, may I know the number of such temples?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : இந்த அரசாங்கத்தின் மூலமாகத் திருப்பணிகள் செய்யப்படுவது கிடையாது. பூவர் அன்ட் நீடி டெம்பிள்ஸ் என்று சொல்லக்கூடிய வருமானமில்லாத கோயில்களுக்கு ஏதாவது கொடுக்கலாம் என்று கொடுத்துவரட் படுகிறது. அதற்காக அரசாங்கத்தின் மூலம் 4 அல்லது 5 லட்ச ரூபாய் ஒதுக்கப்படுகிறது. அதற்குள்ளாகத்தான் செலவு செய்யப் பட்டு வருகிறது.

வீட்டு மனைக்கு கோயில் நிலங்கள்.

* **வினு 650 திரு. எஸ். அக்னிராஜு :** மாண்புமிகு அறநிலைய அமைச்சர் தயவுசெய்து கிழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) கோவில் தரிசு நிலங்களை வீட்டடி மனைகளாக வீடில்லாத ஏழைகளுக்கு விநியோகம் செய்யும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடமிருக்கிறதா?

(இ) ஆம் எனில், விபரமென்ன?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : (அ) இல்லை.

(இ) இவ் வினுவிற்கு இடமில்லை

திரு. பெ. சீனிவாசன் : கோயிலுக்குச் சொந்தமான காலி இடங்களை ஏழைகளுக்கு இலவசமாக விடாவிட்டாலும் கோயில் சொத்தில் வீடு கட்டி குறைந்த வாடகைக்கு விட அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : கோயில்களில் இருந்து வீடுகளை வாடகைக்கு கட்டி விடலாம். ஆனல் கோயில்களில் அதற்கான நிதி இருக்க வேண்டும். அப்படிப்பட்ட கோயில்கள் ஒரு சிலதான் இருக்கின்றன. வருகின்ற பக்தர்களுக்கு வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்பதற்காக அதற்கான விடுதிகளையும்

LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1970 ஏப்ரல் 2]

கட்டிக் கொண்டிருக்கிறார்கள். கோயில்களுக்கு உரிய நிலங்கள் எங்கெங்கு இருக்கின்றன என்பது அறங்காவலர்களுக்கே தெரிய வில்லை, நிர்வாக அதிகாரிகளுக்குக் கூடத் தெரியவில்லை. தமிழ்நாடு முழுவதும் உள்ள கோயில்களுக்கு உரிய சொத்துக்கள், நிலங்கள் எங்கெங்கே இருக்கின்றன என்பதை அறிவதற்காக பழைய ரெக் கார்டுகளை எல்லாம் எடுத்து சர்வே செய்து கண்டு பிடிப்பதற்காக தனிஅதிகாரிகளைப் போட்டிருக்கிறோம். அந்தச் சொத்துக்களை யார் அனுபவிக்கிறார்கள், குத்தகைக்கு விடப்பட்டிருக்கிறதா அல்லது ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருக்கிறதா என்பதை எல்லாம் பார்த்து அதற்குப் பிறகு குத்தகைக்கு விடலாமா, அல்லது மனைக் கட்டுகளாக கிரயத்துக்குக் கொடுக்கலாமா என்பது பற்றி எல்லாம் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறார்கள். அதிகாரிகளுடைய ரிப் போர்ட் வந்த பிறகு அதுபற்றி முடிவு செய்யப்படும்.

கோயில் ஊழியர்கள்

*** வினா 651 திரு. வை. சுவாமிநாதன் :** மாண்புமிகு அறநிலைய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) கோயில் ஊழியர்களின் பதவி, ஊதியம் ஆகியவற்றை மறு பரிசீலனை செய்ய அரசு உத்தேசித்துள்ளதா ?

Regularis

(இ) ஆம் எனில், அவர்களை அரசாங்க ஊழியர்களாக ஆக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. வை. சுவாமிநாதன்: இப்போது அவர்களுக்குக் கொடுக்கக் கூடிய சம்பளம் மிகக் குறைவாக இருக்கிறது. வைத்திய வசதி போன்ற இதர சலுகைகளும் இல்லை. அவர்கள் அரசாங்க ஊழியர் களாகக் கருதப்பட்டால் நிறைய சம்பளம் வரக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. மேலேமேல் வேலை செய்பவர்கள் கீழே வேலை செய்ப வர்கள் என்று பல பிரிவுகளுக்குத் தகுந்தபடி சம்பளம் கொடுக்க வேண்டும். ஆகவே, அவர்களை அரசாங்க ஊழியர்களாகச் செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா: அந்தக் கோயில் சிப்பந்தி களில் இரண்டுவிதமான சிப்பந்திகள் இருக்கிறார்கள். உள்துறை சிப்பந்திகள், உள்துறை அல்லாத சிப்பந்திகள், கோயில் பூசாரிகள் அர்ச்சகர்கள், குருக்கள் போன்றவர்கள் உள்துறை சிப்பந்திகள் குமாஸ்தாக்கள், மானேஜர்கள், டிரைவர்கள், எலக்ட்ரிஷியன்கள், எஞ்சினியர்கள் ஆகியோர் உள்துறை அல்லாத சிப்பந்திகள். உள் துறை சிப்பந்திகள் தவசுக்கு வேலை செய்கிறார்கள். அதாவது